# புதிய தலைமுறை ஒன்றியம் – இத்தாலி

**தொடர்புகளுக்கு 0039 320 4031624 – arugan@hotmail.it**

எமது சேவையினை முறையாக மேற்கொள்ள ஆதரவு தந்தபலெர்மோ வாழ் மக்களுக்கு நன்றிகள்

தமிழ் அமைப்புக்களின் முயற்சி...

மற்றுமொரு வெற்றியில் தமிழ் ஒன்றியம்.

கடந்த பத்துவருடங்களாக தமிழர்களின் சகலவிடயங்களிலும் கருணையோடு செயற்பட்டுவந்த ஒன்றியமானது இலங்கை அரசினால் தமிழ் மங்களுக்கு கிடைக்காத உரிமைகளை கிடைக்கச்செய்வதற்காக தொடர்ந்து செயற்படுவதோடு, புலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்கள் அனைவரின் நலனையும் கருத்திலெடுத்து அதற்கு வேண்டிய தளங்களை அமைத்துவருகின்றமை யாவரும் அறிந்ததே!




இந்த வகையில் இலங்கை ஆவணங்களை பெற்றுக்கொள்வதிலும், தங்கியிருக்கும் நாடுகளில் ஆவணங்களை முறையாக வைத்திருப்பதிலும் புலத்தில் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதிலும் அதிக கவனத்தை எடுத்து, கடந்த காலங்களில் நடமாடும் சேவைகளை மக்கள்மத்தியில் நடாத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கு ஒன்றியத்தின் பிரதான பிரதேச அமைப்பாளர்கள் மற்றும் தமிழ் நலன்விரும்பிகள் மேலும் ஒத்துளைப்பு வழங்கியமை பாராட்டுக்குரியது.

கடந்த யூலை மாதம் 24 தொடக்கம் 26 வரையிலான இத்தாலி பலெர்மோ நகரில் மேற்கொண்ட நடமாடும் சேவையினை வெற்றிகரமாக நடாத்திய பெருமை அவர்களைச்சாரும். இதில் ஏஜெண்டுகளாகவும் தனிப்பட்ட முறையிலும் தூதராலய செயற்பாடுகளை மேற்கொண்டவர்கள் முறையாக ஆவணங்களை நிவர்த்திசெய்யாததும் அதிக கட்டணங்களை அறவிட்டமையும் இதன்மூலம் தெரிய வந்துள்ளது. இதில் பாதிக்கப்பட்ட ஏராளமான மக்கள் பலனடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு பிள்ளைகளைப் பதிதல், கடவுச்சீட்டிற்கு விண்ணப்பித்தல், கடவுச்சீட்டினைப்புதுப்பித்தல், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெறல், மொழிபெயர்ப்புக்கள், தேசிய அடையாளச்சான்றிதழ் பெறல், பொலிஸ்ரிப்போட் எடுத்தல், போன்ற ஏராளம் ஏராளம் விடையங்கள் பூரணப்படுத்தப்பட்டது.

இச்செயலினால் பலருடைய இலாபம் பாதிக்கப்பட்டாலும் மக்கள் திருப்தியுடனும் ஆவணங்களை சரியானமுறையிலும் பெற்றுக்கொண்டனர் என்பதையிட்டு ஒன்றியம் பெருமையடைகின்றது. துமிழர்கள் முறையான ஒருகட்டுக்குள் செயற்பட வேண்டும் என்பதனையும் ஒன்று சேர்தலின் பலம் எமது தமிழ் விடிவிற்கு வழிவகுக்கும் என்பதனையும் இதன்மூலம் உணரக்கூடியதாக இருக்கின்றது. மேலும் அறிவும் ஆற்றலும் மனிதநேயப்பண்பும் உள்ளவர்களை ஒருபோதும் மற்றைய அமைப்புக்கள் உதார்சீனப்படுத்தக்கூடாது என்பதனையும், சிறப்புச்செயற்பாடுகளை மேற்கொள்வோரைப்பாராட்டவும் தமிழர்கள் பின்நிற்கக்கூடாது என்பதனையும் அமைப்பு பணிவுடன் வேண்டிக்கொள்கின்றது. இதனைத்தெரிவிப்பதற்குக்காரணம் பலதடவைகள் உமது அமைப்பு வெளியிட்ட நற்தகவல்களை கிழித்து தமிழர்களுக்குக்கிடைக்கவேண்டிய செய்திகளை குறைத்தமை வருத்தத்தைத்தருகின்றது இவ்வாறான செயற்பாடுகளுக்கு முகம்கொடுப்பதற்குப் பதிலாக திறனுள்ளவர்களுக்கும் அறிவுள்ளவர்களுக்கும் முயற்சியுடையவர்களுக்கும் ஒத்ளைப்பை வழங்குவோமேயானால் தமிழர்களின் விடிவு இன்னும் தொலைவில் இல்லை என்பது எமது திடமான நம்பிக்கை.

தாமாகவே அறிவுள்ள மற்றும் ஆற்றல் உள்ள பலர் எமது ஒன்றியத்தில் இணைய முன்வந்தமை மதிக்கப்படக்கூடியதும் பாராட்டப்படக்கூடியதுமாகும். அதேவேளை அமைப்பில் இருப்பவர்களை தகாதமுறையில் வதந்திகளால் பங்கப்படுத்துவதால் ஏற்படப்போகும் பாதிப்பு தமிழர்களுக்கேயொழிய ஒன்றியத்திற்கல்லவென்பதனை தவறாகப்புரிந்துள்ள அன்பர்கள் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

ஒன்றியத்தின் தகவலகம்
அருகன் வெளியீட்டுப்பணிமனை
தலைமைக்காரியாலியம்
இத்தாலி
ஐரொப்பா




INFOSTRADA


a. veneziano
ROMINA
FRIMM


UNGA
UNIONE
GENERAZIONE


UNIONE DELLA NUOVA
REGGIO EMILIA - ITALY


UNGA
UNIONE DELLA NUOVA GENERAZIONE
REGGIO EMILIA - ITALY
Terry






INFOSTRADA